**வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு**
**வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

# பெறுகை அறிவித்தல்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பினை எதிர்பார்க்கின்றவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்ற இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பயிற்சி நிலையங்களுக்கு சமைத்த உணவு வழங்கல்

**PR/02/01-03(2)**

1. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் (SLBFE) பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுகின்ற பயிலுநர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு நாளாந்தம் தயாரிக்கப்பட்ட உணவு வழங்குவதற்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. உணவு வழங்க வேண்டிய பணியகத்தின் பயிற்சி நிலையங்களின் முகவரிகள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வரிசை இலக்கம் | பயிற்சி நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | மேல் மாகாண புலம்பெயர் வள நிலையம் - மத்துகம | பண்டாரநாயக்க மாவத்த, மத்துகம வத்த, மத்துகம | 034-2247323<br>034-3021566 |
| 02 | வெஹெர பயிற்சி நிலையம் | இல.208A, கொழும்பு வீதி, வெஹெர, குருநாகல். | 037-2054373<br>037-2232640 |
| 03 | தம்புள்ள பயிற்சி நிலையம் | இல.03, நிஷ்ஷங்க மாவத்த, தம்புள்ள. | 066-2284074 |
| 04 | பன்னிப்பிட்டிய பயிற்சி நிலையம் | இல. 241/1, பழைய வீதி, பன்னிப்பிட்டிய. | 011-2846904 |

2. விலைமனுதாரர்கள் தமது நிறுவனத்தின் கடிதத் தலைப்பு மூலம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதனால் மீளளிக்கப்படாத ரூ. 5,000/- உடைய வைப்புத் தொகையை பணியகத்தின் காசாளரிற்கு காசாக செலுத்தி 2026.10.05 ஆம் திகதி முதல் 2026.10.22 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின், பெறுகைப் பிரிவினால் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், கட்டணங்கள் எதுவுமின்றி குறித்த விலைமனு ஆவணங்களைப் பணியகத்தின் பெறுகைப் பிரிவினால் கடமை நேரங்களில் பரீட்சித்துப் பார்க்க முடியும்.

3. ஒவ்வொரு நிலையத்திற்கும் வேறுவேறாக விலைமனுக்கள் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், அதற்கு வேறுவேறாக விலைமனுப் பிணையையும் (Bid Security) வழங்க வேண்டும். விலைமனுப்படிவங்களை இடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “பயிலுநர்களுக்கு தயாரிக்கப்பட்ட உணவு வழங்குவதற்கான விலைமனுக் கோரல் - **PR/02/01-03(02)**” எனக் குறிப்பிடல் வேண்டும். விலைமனுப்படிவங்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதான அலுவலகத்தில், இரண்டாவது மாடியில் பெறுகைப் பிரிவில், அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டி (இலக்கம் 01) இற்கு இடல் வேண்டும்.

4. விலைமனுப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் 2026.10.23 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவடைவதுடன், அந்த விடயம் முடிவடைந்தவுடன் விலைமனுப்படிவங்கள் திறக்கப்படும். விலைமனுப்படிவங்கள் திறக்கும் சந்தர்ப்பத்திற்கு கலந்துகொள்வதற்காக விலைமனுதாரர் அல்லது உத்தரவுபெற்ற பிரதிநிதியொருவருக்கு அனுமதி வழங்கப்படும்.

5. இந்த பெறுகை தொடர்பான இறுதித் தீர்மானம் திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

**தொலைபேசி/ தொலைநகல்- 011-2880550/ 2880564/ 2887585**
**Email-: mgr_procurement@slbfe.lk**